**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S.No.126/2016**

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.5 வாக்குமூலம் 1969-ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A., B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 16.12.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாராயணசாமி | ஜாதி | : | |
| த/பெயர் | : | திருமேனி | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா. 5 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. வாதிகள் எனது உறவினர். வாதிகள் எனது நெருங்கிய உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரகாஷ்க்கும் கண்ணம்மாளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். யார், யார் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது.

2) வழக்கு விவரங்கள் பற்றி எதுவும் தெரியாதால், யார், யார் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்பது பற்றி தெரியாமல் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதியின் கணவர் பெயர் கிருஷ்ணமூர்த்தி. அவருக்கு எத்தனை திருமணங்கள் நடைபெற்றது என்றால் 2 முறை நடைபெற்றது. கிருஷ்ணமூர்த்திக்கு மொத்தம் எத்தனை நபர்கள் வாரிசுதாரர்கள் என்றால் 4 பேர் வாரிசுகள் ஆவார்கள். முதல் 1 மகனும், 2 ம் தாரத்திற்கு 3 பெண் பிள்ளைகள் உள்ளார்கள். கண்ணம்மாள் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் கிருஷ்ணமூர்த்தி பெயரிலுள்ள சொத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) எந்த சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண் எனக்கு தெரியாது. எங்குள்ள சொத்திற்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் கமாட்சியம்மன் கோவில் தெருவிலுள்ள ஒரு வீடு மற்றும் 12 மா நிலத்திற்காக தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் நான்கெல்லை குறித்து எனக்கு தெரியுமா என்றால் வீட்டிற்கு நான்கெல்லை தெரியும். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதி PHD படித்ததாக சொன்னார்கள். எனக்கு நேரிடையாக தெரியாது. நான் கூட்டுறவு துறையில் துணை பதிவாளராக பணியாற்றி வந்தேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டள்ள அலமேலு அம்மாள் யார் என்றால் எனது சின்னம்மா ஆவார். என் அம்மாவின் தங்கை ஆவார். அலமேலு அம்மாள் தற்போது உயிருடன் இல்லை. அவர் கடந்த 2012 ஆம் வருடம் இறந்துவிட்டார். அவர் ஏற்படுத்திக்கொடுத்த உயில் ஆவணம் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி தெரியுமா என்றால் அலமேலு அம்மாள் இறந்தற்கு பின்னிட்டு சொத்துக்கள் பிரிப்பது தொடர்பாக பேசியபோது 1ம் பிரதிவாதி உயில் ஆவணம் குறித்து சொன்னார். பேசி பிரித்துக்கொள்ளலாம் என சொல்லியபோது நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளலாம் என சொன்னார்.

4) நான் யார் அழைத்தன் பேரில் நான் பஞ்சாயத்திற்கு சென்றேன் என்றால் கிருஷ்ணமூர்த்தியின் முதல் தாரத்து மகன் அழைத்தன் பேரில் சென்றேன். வாதி கண்ணம்மாளுக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் உயில் ஆவணம் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணம் எந்த தேதியில் ஏற்படுத்தப்பட்டதென்றால் தேதி தெரியாது. மேற்கண்ட ஆவணங்களை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சொல்லி கேள்விபட்டது தான். நான் இதுவரை நேரில் பார்க்காத செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் உயில் ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்தியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.12.16 18:30:47 +0530

District Munsif

Mannargudi.